*20/12/2018*

OS.No.20/2012

*அய்யம்மாள் (வா.சா.1)*

*<u>குறுக்கு விசாரணை-(10வது பிரதிவாதி தரப்பில்)</u>*

*எனக்கு தற்போது 68 வயதாகிறது. தற்போத நீதிமன்றத்திற்கு என்னுடன் வந்தவர் என் மகள் ஆவார். எனக்கு 24 வயதில் எனக்கு திருமணம் ஆனது. என்னுடைய திருமண வருடம் 1975 ஆகும். 2, 3 வாதிகள் எனக்கு உடன்பிறந்த சகோதரிகள் ஆவார்கள். முதல் தங்கை ராமலெட்சுமி ஆன 2ம் வாதிக்கு 1977ல் திருமணம் நடந்தது. 2வது தங்கையான 3வது வாதிக்கு 1981ல் திருமணம் நடந்தது. எங்கள் மூவருக்கும் என் அப்பா ராமசுப்புநாயக்கர் உயிருடன் இருந்த காலத்திலேயே திருமணம் ஆகிவிட்டது என்றால் சரிதான். எங்களுக்கு திருமணத்தின்போது நகைகள், சீர்வரிசை பொருட்கள் எதுவும் செய்யவில்லை ஆனால் 30 பவுன் நகைகள் மற்றும் ரூ-25 ஆயிரம் ரொக்கத்தை என் அப்பா ராமசுப்புநாயக்கர் 1981ல் கொடுத்தார். என் கணவர் கால்நடை மருத்துவ துறையில் இணை இயக்குநராக பணியாற்றிவிட்டு ஓய்வு பெற்றுவிட்டார். என் பிராதில் சொல்லியது போன்று பாளையங்கோட்டை, பெருமாள்புரம் முகவரியில்தான் நான் குடியிருந்து வருகிறேன் என்றால் சரிதான். என் தங்கை 2வது வாதி ராமலெட்சுமி காரைக்குடியில் 6, 7 வருடமாக குடியிருந்து வருகிறார். என்னுடைய 2வது தங்கை ரெங்கம்மாள் சங்கரன்கோவில் வட்டம் கள்ளிகுளம் கிராமத்தில் குடியிருந்து வருகிறார். என் கணவர் ஓய்வு பெறுவதற்கு முன்பே பாளையங்கோட்டையில் வீடு கட்டி வந்துவிட்டீர்களா என்றால் சொந்த வீடு கட்டி 20 வருடம் ஆகிறது, பாளையங்கோட்டைக்கு வந்து 30 வருடம் ஆகிறது. என் கணவர் 2009ம் வருடம் ஓய்வு பெற்றுவிட்டார்.*

கு.வி.தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது

*திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது.*

*(ஒம்)*A.K.*பாபுலால்,*
*சார்பு நீதிபதி,*
கோவில்பட்டி.